www.padippakam.com

# புதிய கண்ணோட்டம்

வெளியீடு—8 1988 புரட்டாதி 01. ரூ: 2/-

The NEW PERSPECTIVE

# ஆயுத பயமற்ற நிலை உருவாகுமா?.... தமிழ்மக்கள் துணிந்து முன்வருவார்களா?.. இந்தியா சரியான அணுகுமுறைகளைக் கையாளுமா?.. வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தல் மார்கழியில்?

வடக்கு—கிழக்கு மாகாணங்களில் மிக விரைவில் மாகாண சபைத் தேர்தலை நடத்தி முடிக்கும்படி சிறீலங்கா அரசாங்கம் இந்திய அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

தமிழ் நாட்டுக்குரிய தேர்தலையும் நடத்தவேண்டிய கட்டாயம் இருப்பதால் இந்திய அரசாங்கமும் இங்கு மாகாணசபைத் தேர்தலை நடத்திமுடிக்கும்அவசரத்தில்உள்ளது.

வடக்கு—கிழக்கு மாகாணசபைத் தேர்தலை எப்படி நடத்துவது என இன்னமும் இந்தியாவிடம் உறுதியான தீர்மானங்கள் இல்லை எனினும்—

தேர்தலை நடத்தி முடித்து மாகாணசபை நிர்வாகத்தை உருவாக்கிவிட வேண்டும் என்ற அவசரமும் அவசியமும் மட்டுமே இந்திய அரசாங்கத்திடம் காணப்படுகிறது.

தமிழ் மக்கள் மத்தியில் எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக தேர்தல் ஒன்று நடத்தி முடிக்கப்பட வேண்டும் என்பது தமிழ் மக்களுக்கும் அவசியமானதே எனினும்—

அதனை எப்படி நடைமுறையில் அமுல்படுத்துவது என்பது அனைவரிடமும் கேள்வியாகவே உள்ளது.

இதே வேளை வடக்கு—கிழக்கு நிலைமைகளை எடுத்துக்கொண்டால்—

கிழக்கு மாகாணத்தில், அதிலும் குறிப்பாக மட்டக்களப்பு—அம்பாறை மாவட்டங்களில் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான குறைந்தபட்ச வாய்ப்புக்கள் உள்ளன.

அதற்கும் கூட இந்தியா கடுமையான முன் தயாரிப்புக்களை மேற்கொள்ளத் தயாராகியிருக்க வேண்டும்.

திருகோணமலை மாவட்டத்தில் இப்போதுதான் நிலைமை ஓரளவு படிப்படியாக சீர்திருந்த ஆரம்பித்திருக்கின்றது.

ஆனாலும், அங்கு பலாபலன்கள் இன்னும் வெளிப்படையாகத் தெரியும் நிலை உருவாகவில்லை.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் எந்தவொரு மாவட்டத்திலும் இன்னும் குறைந்தபட்ச சாத்தியம்கூட ஏற்படவில்லை.

இந்திய ''றோ'' (RAW) வுக்கும் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தை தடங்கலுக்கு உட்பட்டு நிற்கின்றது.

இரு பகுதியினரது பேரவியாபாரம் ஒரு புள்ளியிலும் சமநிலை அடைவதாக இல்லை.

இலங்கையிலுள்ள இந்தியப்படை உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு மாத்தையா சிறி—

யாழ்.மாநகர சபை ஆணையாளரும் புலிகளின் அதி தீவிர ஆதரவாளருமான சிவஞானத்தினூடாக முயற்சித்திருக்கிறார்,

அதற்கு இந்தியப் படை அதிகாரிகள் பிரபாகரனுடன் மட்டுமே பேசத் தயார் எனக் கூறிவிட்டனர். மாத்தயா குழுவினர் அதற்குத் தயாராக இல்லை.

இதனால், இந்தியப் படை—புலிகளுக்கிடையிலான பேச்சுவார்த்தையும் ஆரம்பிக்கப்பட முடியாமலே முறிவடைந்து போயிருக்கின்றன.

இந்தியத் தூதுவருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு புலிகள் தயாராக இல்லை.

இதனால் அந்தப் பக்கக் கதவுகளும் முற்றாக அடைக்கப்பட்டிருக்கின்றன.

தமிழ் நாட்டில் எல்லா வசதிகளையும் அனுபவித்துக்கொண்டு கள்ளக் கடத்தல், தூள் கடத்தல் தொடக்கம் சகல வியாபாரங்களையும் மேற்கொண்டு வந்த புலிகள் நூற்றுக்கு மேற்பட்டோர்—

இப்போது, இந்திய தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறைகளில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

சிறீலங்கா இராணுவத் தலைமைப் பிரிவொன்றிடமிருந்து புலிகள் அவ்வப்போது பெற்றுவந்த ஆயுத உதவிகளும்—

இந்திய அரசாங்கத்தின் நேரடி நெருக்குதல்களினால் அதுவும் தடைப்பட்டுப் போய்விட்டதாகச் சொல்லப்படுகின்றது.

புலிகளின் முக்கியமான உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் இந்தியப் படையுடனான யுத்தத்தில் இறந்து விட்டனர்;

ஏனையோர் ஆங்காங்கே ஆயுதங்களை விற்றுவிட்டு வெளிநாடுகளுக்கு ஓடிவிட்டனர்.

தமிழ் நாட்டிலிருந்த புலிகள் தம்மிடமிருந்த ஆயுதங்களை பம்பாய்க்குக் கடத்திச் சென்று, அங்கு 25000 ரூபா தொடக்கம் 40,000 ரூபா வரை விற்றிருக்கின்றனர். விற்ற பணங்களுடன் வெளிநாடுகளுக்குச் சென்றும் விட்டனர்.

இப்போது மிஞ்சியிருக்கும் புலிகள் பெரும்பாலும் இந்தியப்படையுடன் நேரடி யுத்தம் செய்யும் வல்லமையை இழந்து விட்டனர்.

பெரும்பாலும்—

சிவில் நிர்வாகக் குலைப்பு,

சாதாரண மக்களைக் கொலை செய்தல்......

ஆகியவற்றின் மூலமே தமது இருப்பைப் பாதுகாத்து வருகின்றனர்.

புலிகள் பலவீனமான நிலையில் இருக்கின்றபோதிலும் அவர்களால் தமது நிலையை உணர்ந்து சரணடையும் நிலையிலும் அவர்கள் இல்லை.

ஏனெனில்—

அவர்கள் சரணடைந்தால் சமுதாயத்தின் மத்தியில் நடமாட முடியாது.

அவர்களால் துன்பப்பட்ட மக்களுக்கும், பலி கொடுக்கப்பட்ட புலி உறுப்பினர்களுக்கும் பதில் சொல்லியாக வேண்டும்.

புலிகளால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளே இப்போது புலிகளுக்கு எதிராக இருக்கின்றன.

( – தொடர்ச்சி 6ம் பக்கம்......)

தமிழ் மக்கள் மத்தியில் உள்ள புத்தி ஜீவிகள், அரசியல் ஆர்வம் கொண்டோர் ஜனநாயகமும் சமாதானமும் நிலைநாட்டப்படுவதற்கும்,

கொலை வெறியர்களின் அடக்குமுறைக்கு உள்ளாகியிருக்கும் தமிழ் மக்கள் மூச்சு விடுவதற்குச் சந்தர்ப்பம் கிடைப்பதற்கும்—

ஒரு தேர்தலின் தேவையை இப்போது அதிகமாக உணர்கின்றார்கள்.

ஆனால், அவர்கள் மத்தியிலும் உள்ள கேள்வி—

ஆயுத வெறியர்களின் தடைகளில்லாத ஒரு வாய்ப்புக் கிடைக்குமா? என்பதுதான்.

புலிகளையும் வழிக்குக் கொண்டு வந்துவிட வேண்டும் என்ற நினைப்பிலேயே இந்தியா இன்னும் இருக்கின்றது.

சமாதானத்தில் எப்படி உயிர் வாழ்வது என்பது புலிகளின் பிரச்சினையாக உள்ளது.

ஜனநாயகம் என்கின்ற சொல்லைக்கூட ஜீரணிக்க முடியா நிலையில் புலிகள் உள்ளன.



படிப்பகம்

www.padippakam.com



# இனிய தமிழ் மக்களே!...

**உங்கள் பிரதிநிதிகள் யார்?**

**உங்களின் அடுத்துவரும் எதிர்காலம் பற்றிய முடிவுகளை எடுப்பதற்கான உரிமையை யாருக்கு நீங்கள் வழங்கப் போகின்றீர்கள்?**

தமிழ் மக்கள் மத்தியில் சமாதானத்தையும் ஜனநாயகத்தையும் நிலை நாட்டவல்லவர்கள்,

தமிழ் மக்களின் எதிர்கால வாழ்வின் அபிவிருத்திக்கான அடிக்கற்களை நாட்ட வல்லவர்கள் யார்?

தமிழ் மக்களின் நியாயபூர்வமான உரிமைகளை நேர்மையான முறையில் வென்றெடுக்கப் போராடக் கூடியவர்கள் யார்?

என்பவற்றை நீங்கள் தீர்மானிப்பதற்கான காலகட்டம் நெருங்கிக் கொண்டிருக்கின்றது என நாம் கருதுகின்றோம்.

## எமது அன்புக்குரிய தமிழ் மக்களே!

இந்திய, இலங்கை அரசாங்கங்கள் நினைப்பது போல தமிழ் பகுதிகளில் அவ்வளவு விரைவாகத் தேர்தலை நடத்த முடியுமா?

மக்கள் சுதந்திரமாகத் தமது வாக்குரிமையைப் பிரயோகிப்பதற்கான சூழ்நிலை ஏற்படுமா?

என்கின்ற கேள்விகள் ஒருபுறமிருக்கட்டும்.

ஆனால்—

தமிழ் மக்கள் மத்தியில் ஒரு தேர்தல் நடத்தப்படவேண்டும்,

தமிழ் மக்கள் தமது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் நிலை ஏற்பட வேண்டும் என்பதை நாம் அனைவரும் முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இன்றைக்கு ஆயுதம் தாங்கிய குழுக்கள் ஒவ்வொன்றும் தாமே மக்களின் உண்மையான பிரதிநிதிகள்' என தமக்குத்தாமே முத்திரை குத்திக் கொண்டு தான்தோன்றித்தனமாகச் செயற்பட்டு வருகின்றன:

புலிகள், மக்களின் தீர்ப்புக்கான சந்தர்ப்பம் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் மிகவும் அக்கறையாக இருக்கின்றார்கள்.

மக்களின் கருத்துச் சுதந்திரத்தை ஆயுதமுனையில் அடக்கி வைத்துக்கொண்டு,

கொலைமிரட்டல் மூலம் நசுக்கி வைத்துக் கொண்டு—

தாமே மக்களின் பிரதிநிதிகள் என்பதைத் தொடர்ந்தும் எப்படியாவது நிலைநாட்டிக் கொண்டிருக்க முயற்சிக்கின்றார்கள்.

முன்னர் வவுனியாச் சந்தியில் இருந்து 'திறீஸ்டார்' என்ற பெயரில் போற வாற லொறிகளையும் கடைகளையும் வீடுகளையும் கொள்ளையடித்துக்கொண்டிருந்த புளொட் கும்பல்—

இப்போது அந்த வேலையை மதவாச்சியில் இருந்து கொண்டும் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தின் சில பகுதிகளில் இருந்து கொண்டும் மேற்கொண்டுவருகின்றது

அந்தக்கும்பல் சிங்கள இன விரோத சக்திகளோடு கள்ள உறவை ஏற்படுத்திக்கொண்டு 'பெரிய மனுசத்தனமான அறிக்கை'களை விட்டுக் கொண்டிருக்கின்றது.

கொள்கையோ, குறிக்கோளோ இல்லாத ஈரோஸ் கூட்டத்தினர்—

பாம்புக்குத் தலையையும் மீனுக்கு வாலையும் காட்டிக் கொண்டே தங்கள் காலத்தை ஓட்டிவிடலாம் என நினைத்து வருகின்றனர்.

முப்பது, முப்பத்தைந்து ஆண்டுகள் பாராளுமன்றக் கதிரைகளைப் பத்திரப்படுத்திக்கொண்ட தமிழர் கூட்டணியினர்—

1983 க்குப் பின்னர் மௌன வாழ்க்கையை ஆரம்பித்தவர்கள்— இப்போதும்கூட தமிழ்மக்கள் மத்தியில் வந்து வீரவசனம் பேசுவதற்கு புலிகளின் அனுமதிக்காகக் காத்திருக்கின்றனர்.

## கருத்துப்பகிர்வு

இதைவிட தமிழ்மக்கள் மத்தியில் தமிழீழ விடுதலைஇயக்கம், ஈழத் தேசியஜனநாயகவிடுதலை முன்னணி முஸ்லிம் காங்கிரஸ், முஸ்லிம் ஐக்கிய விடுதலைக் கூட்டணிஆகிய அமைப்புக்களும்இருக்கின்றன.

## இனிய தமிழ் மக்களே!

'பொடியன்கள் போராடுவார்கள்''

பொடியன்களுக்குள் ஒற்றுமை இல்லை...'

என்று சொல்லிக்கொண்டு நீங்கள் உங்களை ஒருபுறத்தில் ஒதுக்கிக் கொண்டிருந்த நிலையை இனியும் தொடரக்கூடாது.

ஈழப்போராட்டம் என்பது மக்களின் போராட்டம்,

இயக்கங்கள். என்பவை மக்களால் மக்களுக்காகத் தோற்றுவிக்கப் பட்டவை என்பது முறையாகவும் முழுமையானதாகவும் இருந்திருந்தால்—

எமது போராட்டம் இவ்வளவு தூரம் சீரழிந்து போயிருக்காது.

நடந்துமுடிந்தவை நடந்துமுடிந்தவைகளாகட்டும்—

எதிர்காலம் ஒருநல்ல பாதையில் செல்லக் கூடியதாக இருக்கட்டும்.

கொலைகளும், கொள்ளைகளும்

அடாவடித்தனங்களும், அடக்குமுறைகளும்,

நிறைந்த் காட்டுமிராண்டித்தனமான நிலையிலிருந்து தமிழ்ச் சமுதாயம் முதலில் விடுதலை பெற வேண்டும்.

சிறீலங்கா அரசாங்கங்கள் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பறிக்கின்றன என்பதனாலேயே போராட்டத்தைத் தொடக்கினோம்.

ஆனால், அரசியற் சிந்தனைகள் பின்தள்ளப்பட்டு ஆயுதக்கவர்ச்சிகள் ஆதிக்கம் செலுத்தியதனால்—

கடைசியாக, தமிழ் மக்களுக்கு உள்ளேஇருந்து தோன்றிய சக்திகளே தமிழ்மக்களின் மிகவும் அடிப்படை [illegible]யக உரிமைகளையே பறித்து விட்டார்கள்.

தமிழ்மக்களின் அரசியல் ஓட்டத்தில் ஒரு திருப்பம் ஏற்படவேண்டுமானால்,

தமிழ் மக்களின் உரிமைகளுக்கான போராட்டங்கள் நேரான திசையில் செல்ல வேண்டுமானால்,

தமிழ் மக்கள் வியாபாரப் பொருளாக்கப்படும் நிலை மாற வேண்டுமானால்,

தமிழ்மக்கள் மத்தியில் அர்த்தங்களற்ற சாவுகள் நிறுத்தப்படவேண்டுமானால்,

கொலை வெறியர்களும் கொள்ளையர்களும் தமிழ் மக்களின் தலைவர்கள் எனச் சொல்லப்படும் நிலை மாற வேண்டுமானால்—

தமிழ் மக்கள் மத்தியில் ஒரு தேர்தல் வேண்டும்.

## அன்பார்ந்த தமிழ் மக்களே!

தமிழ்மக்கள் மத்தியில் மாகாண சபைத்தேர்தலை நடத்துவதா? பாராளுமன்ற தேர்தல்களை நடத்துவதா?

என்பதல்ல எங்களின் பிரச்சினை.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைப் பொறுத்த வரையில் தமிழ்ப்பகுதி முழுவதும் ஏதாவது ஒரு தேர்தல்நடத்தி முடிக்கப்படவேண்டும் என்பதே நிலைப்பாடாகும்.

தமிழ்மக்கள் மத்தியில் இன்று நிலவும் குழப்பங்கள் தீர்ந்தால்தான் ஒரு தேர்தல் நடத்தப்படமுடியும் எனச் சிலர் கூறுகின்றார்கள்.

அதனால், நாங்கள் கூறுவது என்னவென்றால்—

ஒரு தேர்தல் நடந்தால்தான் குழப்பங்களை முடிவிற்குக் கொண்டு வருவதற்கான வழிமுறையை ஆரம்பிக்கக்கூட முடியும்.

இன்று உள்ள குழப்பமான சூழ்நிலையில் மக்கள் வாக்களிக்க முன்வர மாட்டார்கள் என்றுகூறிக்கொண்டே சிலர் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பறித்துக் கொண்டிருக்கிறார்கள்.

## அறிவார்ந்த தமிழ் மக்களே!

உங்கள் உரிமையை நீங்கள் பயன்படுத்துவதற்கு உங்களுக்கு மன உறுதி வேண்டும்.

பகிரங்கத்தில் உங்களை அடக்கி வைத்திருப்பவர்களுக்கு அந்தரங்கத்தில் நீங்கள் தீர்ப்பளிக்கத் தயாராக இருக்க வேண்டும்.

மக்கள் தங்கள் தீர்ப்பை வழங்குவதைத் தடை செய்யும் எந்தச் சூழ்நிலையையும் உடைத்தெறிய முன்வர வேண்டும்.

கொலை வெறியர்களின் துப்பாக்கிகளுக்கு நீங்கள் அஞ்சியிருக்கிறவரை நீங்கள் ஒவ்வொரு நாளும் இறந்து கொண்டே இருக்க வேண்டும்.

இன்றைக்கு தமிழ் மக்களின் உயிர்களும் உரிமைகளும் மிகவும் மலிவானவையாக்கப்பட்டிருக்கின்றன.

இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும்.

தமிழ் மக்களின் நல்ல எதிர்காலத்திற்கான திறவுகோல் தமிழ் மக்களிடமே உள்ளன என்ற துணிவோடு எந்தச் சூழலையும் சந்திக்கத் தயாராக வேண்டும்.

இதுவே எமது பணிவான வேண்டுகோள்.



**உதயனுக்கு அஞ்சலி**

'ரெலோ' இயக்கப் பொறுப்பாளர்களில் ஒருவரான கு.உதயகுமாரன்(உதயன்) 08.08.88 அன்று கொழும்பு ஆமர்வீதிச்சந்தியில் வைத்துச் சதிகாரர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். கொழும்பில் இப்போது அடிக்கடி நடைபெறுகிற இத்தமிழ் இயக்கப் படுகொலைகளின் சூத்திரதாரிகள் கொழும்பில் சிறீலங்கா அரசாங்கத்தின் அரவணைப்பில் இருந்துகொண்டு எஜமானர்களின் விருப்பத்தை பூர்த்திசெய்யும் கொலைகளை எந்தத் தடங்கலுமின்றி பொலிஸ்—இராணுவ அனுசரணையோடு செய்து வருவதாகவே தெரியவருகிறது. தமிழ்மக்களின் நல் வாழ்வுக்காகவோ அவர்களின் போராட்டத்திற்காகவோ எந்தவொரு துரும்பையும் எடுத்துப் போட்டிருக்காத இந்தச் சதிக் கொலைக்கும்பல் போராளிகளையும் பொதுமக்களையும் கொலை செய்துவருகிற கூலிப்படைக் குண்டர்களாய் மாறி நச்சுக்காற்றாய்உலவிவருகிறார்கள்:

இவர்களால் கொலையுண்டுபோன 'ரெலோ' உதயனுக்கு நாம் அஞ்சலி செய்கிறோம்.

படிப்பகம்

www.padippakam.com




தோழர் நாகேஷ் (தைரி)
நற்பிட்டிமுனை, மட்டக்களப்பு.


தோழர் அரவிந்தன்
மல்லிகைத்தீவு, திருமலை.


தோழர் ரஞ்சித்
தம்பிலுவில்' மட்டக்களப்பு.


தோழர் லிங்கேஸ் (சிவகாந்தன்)
மன்னார்.


தோழர் பேபிரமேஷ் (கமலநாதன்)
மூதூர், திருமலை.


தோழர் சின்னபாபு
காரைதீவு, மட்டக்களப்பு.


தோழர் விக்கி (சகாதேவன்)
வீரமுனை, மட்டக்களப்பு.


தோழர் வினோஜ் (மைக்கல்)
அன்புவழிபுரம், திருமலை.


தோழர் வசு (அமிர்தலிங்கம்)
மகிளூர்முனை, மட்டக்களப்பு.


தோழர் மனோகர்
குருமண்வெளி, மட்டக்களப்பு.


தோழர் லிங்கேஸ் (சுந்தரம்)
சாம்பல்தீவு, திருமலை.


தோழர் ரவிவர்மன் (ஆனந்தன்)
அக்கரைப்பற்று, மட்டக்களப்பு.

பச்சை ரத்த வெறி
பிடித்தவர்களே!
இந்தப் படுகொலைகள்
உங்களுக்கு என்றும்
பாதுகாப்பானதில்லை.
ஜனநாயகத்திற்கும்
சமாதானத்திற்குமாகப்
போராடியவர்களைக்
கொன்று தின்று
போராட்டத்தையே
கொச்சைப்படுத்தினீர்கள்!
நீங்கள்—
உங்கள் துப்பாக்கிக்
குண்டுகளுக்குத்
தின்னக் கொடுத்தது இந்தத்
தோழர்களின் உயிர்களை
மட்டுமா......?
விடுதலைக்காய்
இணைந்தெழுந்த எமது
மக்களின் நம்பிக்கை......
எதிர்காலம்
எல்லாவற்றையுமல்லவா
இரையாக்கிப் பிழைத்திருந்தீர்.
மரணதாக மிருகங்களே?
கொலைகளால்
எதைச் சாதிக்க முடிந்தது?
இழப்புகளினால்......இலட்சியப்
பயணம் நின்றுவிடுவதில்லை.
கொலைகளால்
பிறர் வாயடைத்து
வாழ்வது நிரந்தரமுமில்லை.
இந்த இழப்புக்களின் பதிலை
இனிவரும் வரலாறு எழுதும்.

புலிகளின் பதவிமோகம்
பலியெடுத்த எமது
தோழர்களின் விபரப்
பட்டியல் அடுத்தடுத்த
இதழ்களிலும் தொடரும்.


தோழர் மோஸஸ் (நடேசமூர்த்தி)
பழுகாமம், மட்டக்களப்பு.


தோழர் யோகநாதன்
பாலமுனை, மட்டக்களப்பு


தோழர் மகேந்திரன்
பேய்த்தாழை, மட்டக்களப்பு


தோழர் கண்ணன் (சுதாகரன்)
மட்டக்களப்பு,


தோழர் சதா
கடுக்காமுனை, மட்டக்களப்பு.


தோழர் இலன் (விஜயநாதன்)
அன்புவழிபுரம், திருமலை.


தோழர் சசி (மாதவராஜா)
கோரகல்லிமடு. மட்டக்களப்பு.


தோழர் பிரதீப் (தனசேகரன்)
ஏறாவூர், மட்டக்களப்பு.


தோழர் கெனடி
வீரச்சோலை, மட்டக்களப்பு.


தோழர் சந்திரன்
வாழைச்சேனை, மட்டக்களப்பு.


தோழர் குருகுலன்
தலைக்குடா, மட்டக்களப்பு


நம்பிராஜா (ஆதரவாளர்)
மண்டூர், மட்டக்களப்பு.



தோழர் சுபத்திரன் (கோபாலன்)
மட்டக்களப்பு


தோழர் சுதா
திருமலை


தோழர் காந்தன் (தவக்குமார்)
மட்டக்களப்பு

படிப்பகம்

www.padippakam.com

வெளியீடு— 8 1988 புரட்டாதி 01.

புதியகண்ணோட்டம்

# விஜயநாதன், சிதம்பரநாதன் கொலைகளின் பின்னணியில் பாதுகாப்புக்கடவுளர்களும் பக்கவாத்தியக்காரர்களும்

அண்மையில் திருமலை பிரஜைகள் குழுத்தலைவர் விஜயநாதன் புலிகளினால் கடத்திச் சென்று சுடப்பட்டுக் கிண்ணியா வீதியில் போடப்பட்டமையும்,

அதற்கு முன்னர் தம்பலகாமம் ஆசிரியர் சிதம்பரநாதனைப் புலிகள் பேச அழைத்துச் சென்று சுட்டுக் கொன்றமையும் நடந்து முடிந்திருக்கிறது.

இதுபோன்ற சமுதாயப் பிரமுகர்களுக்குச் 'சமூக விரோதிகள்' என்று பட்டம் சூட்டப்பட்டுக் கொலை செய்யப்படுவது புலிகளின் தான்தோன்றித்தனமான கொலை விசர் வாடிக்கையாகிவிட்டது.

யாழ்ப்பாணத்தில் சென்ஜோன்ஸ் கல்லூரி அதிபர் ஆனந்தராஜா மாஸ்டர், முன்னாள் மாவட்ட அபிவிருத்திச்சபைத் தலைவர் நடராசா, கம்யூனிஸ்ட்கட்சி மாவட்ட அமைப்பாளர் விஜயானந்தன்... ... என்று பலரையும், மட்டக்களப்பில் அதிபர் தருமலிங்கம், ஆசிரியர் குணரத்தினம், தொழில்நுட்ப வியலாளர் சுந்தரலிங்கம், விசேட சேவை அலுவலர் சுந்தரநாயகம்... என்று கணக்கற்றோரையும் ஆதிக்க வெறியினால் கொன்று போட்ட புலிகள், எல்லோருக்கும் 'சமூக விரோதிகள்' என்று பட்டம் சூட்டியே போராட்டத்தினைக் கொச்சைப்படுத்தியிருக்கிறார்கள்.

எவ்வித கேள்விநியாயங்களுமில்லாத இந்தக் கொலைகள் அனைத்துக்கும் தமிழ் மக்கள் மத்தியில் எதிர்ப்பு காட்டப்படக்கூட முடியாதவாறு பயமுறுத்தல் அழுத்தியிருக்கிறது.

திருமலை விஜயநாதன், சிதம்பர நாதன் கொலைகளுக்கும் பிரஜைகள் குழுக்களோ, அன்னையர் முன்னணிகளோ, ஜனநாயகம் விரும்பிச் சக்திகளோ மற்றும் எந்த அமைப்புக்களோ வாய் திறந்து கண்டிக்கக்கூடத் திராணியற்று வாயை இறுகமூடிக் கட்டுண்டு போய்க் கிடக்கிறார்கள்.

இந்தப் பய மௌனங்களும், இடம் கண்ட இடத்தில் மடம் கட்டுவது போல முடிந்த இடங்களில் மட்டும் ஜனநாயகம் சமாதானத்துக்காய்க் குரல் கொடுத்துக் கூவுகின்ற போக்கும்—

புலிகளின் கட்டாக்காலிச் சண்டித்தனங்களுக்கும், தன்னிச்சைக் கொலைகளுக்கும் ஊக்கமளிப்பவையாகவே அமைந்து வருகின்றன.

மீண்டும் இத்தகைய பயமுறுத்தல்களைப் பயன்படுத்தியே புலிகளும், புலிகளின் ஊதுகுழல்காரர்களும் உலகத்தின் கவனத்தைத் திருப்பிச் சென்றுவிடக் கடுமையான முயற்சிகளோடு செயற்பட்டு வருகின்றார்கள்.

திருமலை பிரஜைகள் குழுத் தலைவரான திரு. விஜயநாதன் அவர்கள் தமிழரசுக்கட்சி திருமலை எம்.பி. யாயிருந்து மறைந்த நேமிநாதன் அவர்களின் சகோதரராவார். திருமணமும் செய்துகொள்ளாமல் முழுநேரமாக அரசியலில் ஈடுபட்டுவந்தவர்.

புலிகளின் ஆதரவாளராயிருந்து இலங்கை—இந்திய ஒப்பந்தத்தின் பின் பிரபாகரனை வரவேற்று வாழ்த்துப்பத்திரம் எழுதியனுப்பி, அதைப் பெருமையாகவும் கருதியிருந்த விஜயநாதன் அவர்கள் புலிகள் கடத்திச் சென்று சுட்டுக் கொன்றுவிடுமளவிற்குச் செய்திருந்த தவறு; தம்பலகாமத்தில் புலிகளின் கண்ணிவெடியொன்று பொதுமக்களைப் பலியாக்கியதைக் கண்டித்ததுதான்.

திருமலை பிரஜைகள் குழுத்தலைவர் என்றமுறையில் திருமலை வாழ் பொதுமக்கள் கொலைசெய்யப் படுவதைக் கண்டிக்கமுற்பட்ட விஜயநாதனின் வாயை அடைத்து விட முடியாமற்போன புலிகள், அவரைக் கொன்று கிண்ணியா வீதியில் எறிந்தனர்.

யாருக்கும் தெரிவதற்கு முன்பாகவே இந்தியப் படையினர் சடலத்தை எடுத்துச்சென்று விட்டதாக அங்குள்ள மக்கள் தெரிவிக்கிறார்கள்.

யாராக இருந்தாலும் புலிகளுக்குப் பிடிக்காதவர்கள், மாற்று அபிப்பிராயத்தைச் சொல்பவர்கள் கொலை செய்யப்படுவார்கள் என்பதை நிரூபிப்பதன் மூலம் இந்தக் கொலைக்கும்பல் தாம் வல்லவர்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள முயற்சிக்கிறது.

சிதம்பரநாதன் ஆசிரியரும் ஆரம்பத்தில் புலிகளின் தீவிர ஆதரவாளராயிருந்தவர்.

தம்பலகாமத்தில் புலிகளுக்குப் பாதுகாப்பளிப்பதிலும். பண வசூல் செய்துகொடுப்பதிலும் முன்னின்றவர். புலிகள் தமிழ் மக்களுக்காகப் போராடுகின்றார்கள் என்று நம்பித் தன்னாலியன்றளவு உதவிகளையெல்லாம் செய்து வந்தார்.

ஒருநாள் காலையில் சிதம்பரநாதனைக் குறிப்பிட்ட இடத்திற்கு வந்து சந்திக்கச் சொல்லிச் சென்றிருந்த புலிகளைச் சென்றுசந்தித்தார் மாஸ்ரர்.

புலிகளின் தம்பலகாமப் பொறுப்பாளர் விக்கி, விசு, மது வேறும் மூவரும் இருந்தார்கள். சம்பாஷணை பின்வருமாறு இருந்தது:

விசு: ''மாஸ்ரர்! நீங்கள் எங்களுக்கு 5,000 ரூபா தர வேணும்''

சிதம்பரநாதன்; ''என்னிடம் காசு இல்லை''

விசு; ''குறிப்பிட்டு ஒரு திகதியைச் சொல்லும் மாஸ்ரர்''

சிதம்பர: ''அப்பிடியும் என்னால் சொல்ல முடியாது''

விசு: ''நீரும் உமது மனைவியும் உழைக்கிறீர்கள், கார் இருக்கிறது மோட்டார் சைக்கிளும் உண்டு. வயல் 8 ஏக்கர் செய்திருக்கிறீர் ஏன் தரமுடியாது.''

சிதம்பர: ''கார் தங்கச்சிமார் வாங்கித் தந்தது; மோட்டார் சைக்கிள் தம்பியுடையது அவன் பூஸாவில் இருக்கிறான், வயல் கடன்பட்டுச் செய்திருக்கிறேன்.

நாங்கள் எடுக்கும் சம்பளம் எங்கள் செலவுக்கே போதாது. மிச்சம் முழுவதும் கடனுக்காக வெட்டப்படுகிறது......
எனது வங்கிப் புத்தகம், சம்பளப்பட்டியல் இவைகளை நீங்கள் பார்க்கலாம். நான் இங்கேயே இருக்கின்றேன்.
நீங்கள் வீட்டுக்குப் போய் நகை நட்டு ஏதும் இருந்தாலும் எடுத்துக் கொள்ளுங்கள்......
ஆனால், வேளாண்மை விளைந்ததும் ஊரில் உள்ளவர்கள் என்ன தருகிறார்களோ அப்பிடி நானும் தருவேன்......''

விசு; ''சரி மாஸ்ரர் நீங்கள் போங்கோ''

இந்தச் சம்பாஷணை நடந்து ஒருமாதத்தின் பிறகு சிதம்பரநாதன் மாஸ்ரர், புலிகளால் 'சமூகவிரோதி' எனக் குற்றம் சாட்டப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்.

புலிகளுக்கு பணம் தர மறுப்பவர்களும், புலிகளின் அடாவடித் தனங்களுக்கு மாற்றாகத் தெளிவான அரசியற் கருத்துக்களைத் தெரிவிப்பவர்களும், மனிதநேயம் கொண்டு செயற்படுவதற்கு முன் வருபவர்களும் இந்தக் கொலை விசர்பிடித்திருப்பவர்களால் 'சமூக விரோதிகள்' என்று குற்றம் சாட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்டுவிடுகிறார்கள்.

இதனாலேயே தமிழ்ப் பிரமுகர்கள் பலரும் புலிகளை எதிர்த்து வாயைத் திறக்காமலேயே உயிர் வாழ்ந்து வருகின்றார்கள்.

வாயைத்திறந்து கருத்துச் சொல்லமுற்படுபவர்களுக்கு விஜயநாதன், சிதம்பரநாதனுக்கு ஏற்பட்டகதியே நிகழ்ந்து வருகின்றது.

கொலைக்கும்பலின் தலை அறுவடைக்குத் தப்பி உயிர் வாழ விரும்பி அவர்களுக்கு ஆதரவாகவே பேசிவிடலாம் என்று ஆரம்பித்த சிலரும் இப்போது தங்கள் பாதுகாப்புக் கடவுளர்கள் வீழ்ந்து விடக்கூடாதே என்ற பயத்தில் தவளைக்கத்தல் போட ஆரம்பித்திருப்பதையும்தான் பார்க்கமுடிகிறது.

இவர்களும்தான் இத்தனை பொதுமக்களும் பிரமுகர்களும் தான்தோன்றித்தனமாய் கொலை செய்யப்பட்டுப் போனதற்குக் காரணமாயிருந்தவர்கள்.

எத்தனை நாட்களுக்குத்தான் இந்தக் கொலைகாரர்களும் ஊதுகுழல்காரர்களும் பயமுறுத்தல்களினாலேயே தங்களைப் பாதுகாத்துக்கொள்வார்கள் என்பதை மக்கள் பார்க்கத்தான் போகிறார்கள்.

## 'ஆண்ட பரம்பரை'???

''ஆண்ட பரம்பரை''யாம்
யாரவர்கள்?
அவர்களுக்கும் எங்களுக்கும்
என்ன சம்பந்தம்?
மொழியின் பேராலும் இனத்தின் பேராலும்
எங்களையும் அவர்களோடு
இணைத்துப் பேசுகிறார்களே?
ஒருவேளை நாங்களும் அவர்களுள்
அடங்குவோமோ?
இல்லையே!

எங்கள் கரங்களின் உழைப்பு
செம்மண் தரைகளில்
உடல்ம வர்க்கத்தால் சுரண்டப்பட்டன
எங்கள் மனிதத் தேவைகள்
சுரண்டும் மிருகங்களால்
மீண்டும் மீண்டும் அழிக்கப்பட்டன!
எங்கள் ஆத்ம விருப்பங்கள்
ஆதிக்க நகங்களால்
கீறிக் கீறிக் கிழிக்கப்பட்டன!
எங்கள் பள்ளிச் சிறுவர்கள்
பாடசாலையில்
எழுந்து நின்றே படித்துக் கொண்டன(ர்)!

'சங்கிலியன்'களும்
'பண்டார வன்னியன்'களும்
என்ன நம்மைப்போல்
உழைக்க நிலமில்லாதவர்களா?
இருக்க வீடில்லாதவர்களா?
உண்ண உணவில்லாதவர்களா?
இல்லை!
இவர்கள் எல்லாமிருந்தவர்கள்
எல்லாமுள்ள வர்க்கத்தின் பிரதிநிதிகள்!
ஆனால் நாங்கள்
''இழப்பதற்கு எதுவுமற்றவர்''கள்
எனவே; இந்தப் பரம்பரைக்கும்
நமக்கும் என்ன சம்பந்தம்?

நாங்கள் 'கூலி'யின் பேராலும்
சாதியின் போராலும்
சமுதாயத்தின் கீழ்தட்டில்
அடுக்கப்பட்டவர்கள
ஆம் நாம் ஒடுக்கப்பட்டவர்கள்!
நாங்கள் கலட்டித் தரையிலும்
சுடலை மேட்டிலும்
உவர்நிலத்திலும் ஒதுக்குப்புறத்திலும்
வாழச்சொல்லி நிர்ப்பந்திக்கப்பட்டவர்கள்!

யாரால்? யாரால்? யாரால்?
ஆண்ட பரம்பரையால்.
நிலப்பிரபுத்துவ மன்னர்கள் முதல்
நிறம் வெளுத்த 'எம். பி'க்கள் வரை
அரசுக்கட்டில் அமர்ந்திருந்த
ஆண்ட பரம்பரையால்!

ஆம்! தோழர்களே!
இவர்களுக்கும் நமக்கும் சம்பந்தமில்லை
இவர்களோடு நமக்கு சமரசமுமில்லை!
மீண்டும் இவர்கள் ஆளுவதற்காக
மாண்டு போக எங்களை வரட்டாம்;

வாருங்கள் தோழர்களே'
மாற்றி எழுதுவோம்
இவர்கள் வகுத்த தீர்ப்பினை
இனிமேல் ஆளப்போவது
ஆண்ட பரம்பரையல்ல
ஆளப்பட்ட பரம்பரை

ஆதிக்க வேர்களை அறுத்து வீசவும்
அடக்குமுறைப் பற்களை
பிடுங்கி எறியவும்
சாதிக்க வல்ல சக்தியே எழுக!
இனிமேல் ஆளப்போவது
ஆண்டபரம்பரையல்ல
ஆளப்பட்ட பரம்பரை...

——சூரியன்

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி EPRLF

கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் திரு அ. வ. அருண்மொழித்தேவன் அவர்களினால் 119, பல்கலைக் கழகவீதி. [illegible] - சி. ஆர். சி. அச்சகத்தில் 01. 08. 1988. அன்று அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

படிப்பகம்